# ஆத்மஜோதி



அருட்சோதி வள்ளலார் இராமலிங்க சுவாமிகள்

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாதவெளியீடு


எல்லாஉலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே – சுத்தானந்தர்


சோதி 5 | நந்தன ஹு தைமாசம் | திகதி 1 | சுடர் 3


## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| பிரார்த்தனை | .... | ... | — |
| இலங்கை பொலிக | .... | .... | — |
| சுத்த சன்மார்க்கம் | ... | ... | — |
| குருமணிக்கண்ணி | ... | .... | — |
| சுத்தனின் சிவகிரி யாத்திரை | ... | .... | — |
| அருட்சோதி ராமலிங்கர் | ... | .... | — |
| அருட்சோதி மாலை | .... | ... | — |
| நலம்பெற்ற வாழ்வு | ... | ... | — |
| உண்மைத்துறவு | ... | ... | — |
| விபூதி | ... | .... | — |
| நிலையப் பதிப் | ... | ... | — |



## ஆத்ம ஜோதி

❊ ஆயுள் சந்தா ரூபா 75/- ❊ வருடசந்தா ரூபா 3-

ஆத்மஜோதி நிலயம் நாவலப்பிட்டி (இலங்கை)

கௌரவ ஆசிரியர்.- க. இராமச்சந்திரன்

நம் 60 டீல் பிளேஸ் கொள்ளுப்பிட்டி, கொழும்பு.

பதிப்பாசிரியர்: நா. முத்தையா

ஆத்மஜோதிநிலையம் நாவலப்பிட்டி.



# பிரார்த்தனை.

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்
பிடியா திருக்கவேண்டும்

மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும்உனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உள்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.

இதற்கு விளக்கம் 71-ம் பக்கத்திலுள்ள வள்ளலார் விளக்கிய நலம் பெற்றவாழ்வு என்னும் கட்டுரையில் காண்க,

# இலங்கை பொலிக.

### எடுப்பு

பொலிக பொலிக நீடு பொலிகவே
புலவர் போற்றும் பொன்னிலங்கை (பொ)

### தொடுப்புகள்

உலக நடுவே ஓங்கி நிற்கும்
ஒளிமணிக் கோயில்
அலைகடல் முரசம் ஆர்க்கும்
அணிமணிக் கோயில் (பொ)

பச்சை மலைகள் பல பாயுநதிகள்
பழனம் பூம் பொழில்
உச்ச மான தெய்வக் கலைகள்
ஓங்கு நாடிதே (பொ]

இந்து முஸ்லிம் கிறிஸ்து புத்தர்
இணைந்து வாழவே
சிந்தை கூடும் திருவடிச்
சிகர நாடிதே [பொ]

சிங்க நெஞ்ச வீர மணிகள்
சிங்கக் கொடியுடன்
மங்களங்கள் பொங்கக் காக்கும்
மரகதத் தீவு--முருகன்
வளர்த்திடுந் தீவு—முனிவர்
வாழ்ந்திடுந்தீவு—நன்று [பொ]

# சுத்த சன்மார்க்கம்.

(ஆசிரியர்)

"பிரம்மனும் ஆத்மாவும் ஒன்றே; அதையறிபவனே சிவன். சிவனின் இதயமே விஷ்ணு, விஷ்ணுவின் இதயமே சிவன். யாதொருபேதமும் கிடையாது: அறிவாளிகட்கு இந்த உண்மைவிளங்கும்";

இக்கருத்து 'சுப்ரமண்யர் ஞானம் 500என்றும் நூலில்காணப்படுகின்றது, நூற்றெட்டு முக்கிய உபநிடதங்களுள் ஒன்றான ஸ்கந்த உபநிடதத்தின் சமரஸ விளக்கத்தைத் தழுவியதே மேற்கூறிய வாக்கியம் என்பர் ஆராய்ச்சியாளர். பேத உணர்ச்சியை விலக்கி ஒற்றுமையை வலியுறுத்தத் தோன்றிய மிகப்பழைய சமய சாஸ்திரங்களுள் ஸ்கந்த உபநிடதம் தலை சிறந்து விளங்கும் நூலாகும். பகவத்கீதை நாலாம் அத்தியாயம் பதினோராம் சுலோகத்தில் அடங்கிய கருத்து அதன் சாரமேயாம் அம்மட்டோ' பின்னளில் சைவசித்தாந்த சாத்திர தோத்திர நூல்களில் அடங்கியுள்ள 'அறுவகைச் சமயத்தோர்க்கும் அவரவர் பொருளாய்' "யாதொரு தெய்வங் கொண்டீர் அத் தெய்வமாகியாங்கே மாதொருபாகர்தாமே வருவர்" "விரிவிலா அறிவினர்கள் வேறொரு சமயஞ்செய்து, எரிவினாற் சொன்ன போதும் எம்பிராற் கேற்றதாகும்" என்பனபோன்ற சமரஸ வாக்கியங்கள் சகலதும் மேலே குறிப்பிட்ட உபநிடதக் கருத்துக்களின் எதிரொலியேயாம், இவையெல்லாம் பல்வேறு வகைப்பட்ட சமயக்கொள்கைகளும், சமயக்கட்சிகளும், சண்டைகளும் தோன்றியபின் அவற்றால் பிரிக்கப்பட்ட மனிதசமுதாயத்தினிடையே ஒற்றுமையையும் அமைதியையும் நிறுவும்பொருட்டு அறிஞர்களால் உபதேசிக்கப்பட்டவையாகும்.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற உன்னத லட்சியத்துடன் வாழ்ந்த ஆதிமனிதனும் தமிழனுக்கு சமரஸப் போதனை அந்நாளில் தேவைப்படவேயில்லை: "யாதும் ஊரே

யாவரும் கேளீர்" என்றவாக்கு மேலே குறிப்பிட்ட வாக்கியங்களுக்கெல்லாம் காலத்தால் முற்பட்டதாகும். சாதி வித்தியாசம் சமயவித்தியாசம் எதுவுமின்றி ஆன்மநேய ஒருமைப்பாடுடன் வாழ்ந்த தமிழ்க் குலத்தில் சமயபேதம் தலைகாட்டிய போது எழுந்ததே "எங்கள் தெய்வம் உங்கள் தெய்வம் என்று பேதமுள்ளதோ? உங்கள் பேதமன்றியந்த உண்மை பேதமில்லையே" என்றசிவவாக்கியரின் ஒற்றுமை முரசொலி.

எமது பழைய சித்தர்கள் கண்ட மார்க்கம் சுத்த சன்மார்க்கம் உலகெங்கும் ஒரே மயமாய்ப் பரவியிருந்தது அதுவே. சின்ன ஆசியாவில் பல நூற்றாண்டுகளாக மண்ணோடுமண்ணாக மறைந்து கிடந்துவிட்டு, "ஆண்டவன் ஒருவனே; மனித சாதி முழுவதும் அவனது குழந்தைகள்" நபிநாயகத்தின் வாக்காக வந்ததும் அந்தச் சன்மார்க்கத்தின் சாரமே எனக்கூறுதல் மிகையாகாது. பழைய சுத்தசன்மார்க்கத்தின் உயிர் நாடியாயிருந்த அன்பொருமைக்கு திருமூலர் காலத்திலேயே சிதைவு ஏற்பட்டுவிட்டதென்பதற்கு அவர் அருளிய "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார், அன்பே சிவமாவதாருமறிந்திலார்" என்ற திருமந்திரம் ஒன்றேபோதிய சான்றாகும்.

பழந்தமிழர் பேணிய சன்மார்க்கம் உலகிலுள்ள எல்லார்க்கும் உரியது; பொதுவானது: அது மீண்டுந்தமிழ் நாட்டில் உயிர் பெற்றால்தான் முன்போல உலகெங்கும் பரவமுடியும் என்ற உண்மையை நன்குணர்ந்தபெருமை தாயுமானவரைச் சார்ந்ததாகும். வித்தகச்சித்தர் கணத்தைப்போற்றித் துதிக்க அப்பெருந்தகை "சமயபேதத்தவர்க் கணுகொணு மெய்ப்பொருளை" அடையும் நெறியை அன்பொருமை, சமய ஒருமை, உண்மை ஒருமை, என மூவிதமாக விளக்கியுள்ளார். அவருக்கு முன் எவ்வித அரியவிளக்கம் தந்தவர் எவருமில்லை. காலதேவி வேண்டிச் செல்லும் "பழைய" புதுநெறியை முதலில் கண்டுபிடித்த தீர்க்கதரிசி அவரே! அவரது சிவத்தொண்டைத் தொடர்ந்துசெய்யத்தோன்றியவர் இரமாலிங்க சுவாமிகளவர். தாயுமானவர் முதலாவதாக விளக்கிய அன்பொருமையே அவரது இலட்சியமாகும். உலகத்திற்குக் தமிழ்நாடு முன்போல் வழிகாட்ட வேண்டும்' அப்படிச் செய்வதற்கு அது தனது பழைய பொதுநெறியுணர்வை முதலில்

அந்தஇயற்கைப் பொதுநெறிக்குக்கேடு சூழ்ந்தசாதிசமயக்கொடுமைகளும் சிறுமைக் கொள்கைகளும், கோயில் ஊழல்களும் இழிவுகளும் மறையவேண்டும். இவையே அருட்பிரகாச வள்ளலாரின் பாடல்களில் அடங்கிய கோரிக்கைகளாகும். "அன்பின் வழியது உயிர்நிலை" யென்று வள்ளுவர் வகுத்த இலக்கணத்திற்கு விரிந்த இலக்கியமாக அமைந்தது வள்ளலாரின் அருட்பா.

தமிழ்நாட்டில் இன்று எங்கு பார்த்தாலும் நாஸ்திகப் புயல் வீசுகின்றது. பாடல் பெற்ற தலங்களாகப் புகழப்பட்ட இடங்களெல்லாம் ஒளியின்றிக்கிடக்கின்றன. முக்கிய திரு நாட்களில் தானும் அடியார் கூட்டத்தை அங்கே காணமுடியாது. ஆனால், வடலூரில் மாத்திரம் தைப்பூசத்திருநாளன்று லட்சக்கணக்கான மக்கள் கூடி அருட்பாப் பாடுகின்றனர். ஆஸ்திகம் தனது பிறப்பிடமாகிய தென்னாட்டை விட்டு முற்றிலும் மறையவில்லை, மறையவே மாட்டாது. என்பதற்கு யாம் காணும் விசேட அறிகுறி இதுவே. தமிழ் நாட்டின் வரலாற்றில் தைமாசப் பூசநாள் ஓர் புண்ணிய வேளையாகும். திருமயிலாப்பூரில் பூம்பாவையை எழுப்பிய திருப்பதிகத்தில்,

"மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலை
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரம் அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்"

எனவரும் சம்பந்தர் தேவாரம் அதற்குச் சான்றாகும். அவர்காலத்திலும் அதற்குமுந்தியும் பிந்தியும் பெற்றிராத தனிச்சிறப்பை அப்பூசநாள் இராமலிங்கர் வருகையால் அடைந்துள்ளது. அருட்பிரகாசரின் ஆத்மசக்தியை விளக்க வேறு சாட்சி தேவையேயில்லை. அவர் உபதேசித்த ஜீவகாருண்யம் பரவின் தமிழ் நாடுதலை நிமிரும், பாரததேசம் புண்ணியமும்புகழும்பெறும். உலகமே ஆன்மநேய ஒருமைப்பாட்டை உணர்ந்து உய்யும்!

அருட்பெருஞ்சோதி ஆண்டவன் வாழ்க!



# குருமணிக் கண்ணி,

ஆனந்த ஜோதி யருள்வெள்ளம் பாய்ச்சி யென்னுவள்
ஞானப் பயிர்வளர்ப்பாய் ஞானக் குருமணியே!

பிடித்துன் மலர்ப்பாதம் பித்தாகிக் கூவும்
அடித்தொண்ட னேக்காவாய் அன்புக் குருமணியே!

நினையே நினைத்துருகி நீள்விழிநீர் பாய்ச்சும்
எனையாண்டு கொள்வ தெப்போ தின்பக்குருமணியே!

அத்தா உலகில் அலைந்து பரிதவித்தேன்
சுத்தாசன் மார்க்கச் சுடரே குருமணியே!

பல்சமயத் தத்துவத்தைப் பார்த்துப் பயின்று மின்னும்
அல்லலறு ஞானம் அறியேன் குருமணியே!

தாந்தாம் உயர்வென்று தம்பட்டம் போடுகின்றார்
மாந்தர் மனமயக்கை மாற்றாய் குருமணியே!

காட்டில டர்ந்துவளர் நான விகாரமதக்
காட்டைத் திருத்தக் கருதாய் குருமணியே!

பாரெல்லாந் தானும் பரமனைச் சாதனத்தால்
ஓராது கெட்டார் உலகோர் குருமணியே!

வற்றாச்சி வானந்த வாரிதியே உன்னருளைப்
பெற்றாலினிக் குறையேன் பேசாய் குருமணியே!

என்னுயிர்க்குள்ளே இருந்தென்னை யாட்டுகின்ற
தன்மயத்தைப் போற்றுதவக் தாராய் குருமணியே!

பூரணத்தைக் கண்டுபரி பூரணமாய் மக்களெல்லாம்
பூரணமாந் தொண்டு புரிவேன் குருமணியே!

உன்னைப் புரியாமல் உள்ளத்தி லேவைத்தேன்
என்னைப்பிரியாமல் இருப்பாய் குருமணியே! [பாரதசக்தி]

# சுத்தனின் சிவகிரியாத்திரை.

உலகினில் வழங்கு கின்ற சமயத்தின் உள்ள மெல்லாம்
அலசினேன் எனக்கு வேண்டும் அமைதியுங் கனலுங் காணேன்
கலகமும் "எனதே" யென்னுங் கட்சியுங் கண்டேன் அன்றி
நலமுறு பரமானந்த ஞானத்தை யடைந்திலேனே!

யாரெனக் கந்த ஞானம் ஈகுவார் அவனி தன்னில்
யாரென தார்வங் காண்பார் யாரென தன்பு தேர்ந்து
கோரிய பொருளை நேரே குணமுடன் கொடுப்பா ரென்றே
ஊர்தொறுந் தேடித்தேடி உண்மையை நாடிச்சென்றான்.

வான ளாவிய தீச்சுடர் இலிங்கம் போல் வளர்ந்த
தேன ளாவிய நதிவளர் சிவகிரி செறிந்த
கானளாவிய காட்சியைக் கவியெனக் கண்டே
ஊன ளாவிய உடலுடன் உள்ளமும் சிலிர்த்தான்.

பண்ணவர் தவப் பயன்பெறுஞ் சிவகிரி பணிந்து
கண்ணியம் பெறு ஞானமா முனிவரன் கண்ட
புண்ணியம் பெறு நிலையத்திற் புனிதனும் புகுந்தான்
உண்மை யன்பரைக் கண்டனன்; ஒருகுரு கண்டான்!

சகந்தனை யொரு சித்திரச் சுருளெனக் காண்பான்
அகந்தை யற்றவன்; அடக்கமே அழகென வுடையான்
தகுந்த பக்குவம் அறிந்தவன்; சாதனம் வகுத்து
மிகுந்த நேசமோ டனைவர்க்கும் விவேகத்தைத் தருவோன்!

சாதி யற்றவன், சமயமும் அற்றவன், உலகின்
பீதி யற்றவன், பெண்களைத் தாயென மதிப்பான்;
வேத மாகமம் வேறுள விரிமறை கற்றோன்
பேத மற்றவன் பிரிவினை யற்றவன் இவனே!

இத்தகைக்குரு வரனைக்கண் டின்பமோங் கியகம்
சுத்த னைமுகங் கண்டதுஞ் சுடர்நகை புரிந்தே
வைத்தருள்விழி மௌனமாய் மனந்திறந் துள்ளே
சத்தி யத்தினைத் தூண்டினன் சதானந்த யோகி! (பாரத சக்தி)

# பொங்கல் பூத்தது.

1 பொங்கல் பூத்தது
புதுமை பூத்தது
எங்கும் பூத்தது இன்பம்—புது
எழில் நிறைந்தது எங்கும் [பொ]

2 தங்க நெல் மணி
தந்த செங்கதிர்
பொங்கிப் பூத்தது பாரீர்—ஒளி
புதுமை செய்யுது காணீர் (பொ)

3 தையும் பூத்தது
தமிழ் மணத்தது
செய்யும் கைத்தொழில் எல்லாம்—புது
சிறப்புப் பெற்றது பாரீர் [பொ]

4 நெய் மணத்தது
நிறைவு பூத்தது
மெய் மணத்தது பாரீர்—எங்கள்
மேழிச் செல்வத்தைப் பாரீர் [பொ]

5 தெருக்கள் எங்கணும்
திரு நிறைந்தி—
கருப்பு வாழைகள் மஞ்சள் —எழில்
காட்சி செய்யுது பாரீர் [பொ]

6 திங்கள் பூத்தது
திலகம் பூத்தது
எங்கள் வாழ்க்கையில் இன்பம்....புது
எழுச்சி யூட்டுது பாரீர் [பொ]

—ஆறுமுகநாதன்

# அருட்சோதி ராமலிங்கம்.

சுத்தானந்த பாரதி

சென்ற நூற்றாண்டில் இரண்டு தீர்க்கதரிசிகள் தோன்றினார்கள். ஒருவர் வங்கத்திலெழுந்த இராமகிருஷ்ணபரமஹம்ஸர் ஆவார். மற்றொருவர் வடலூரிலெழுந்த அருட்சோதி ராமலிங்கம் ஆவார். தமிழுலகில் தோன்றி உலகிற்கெல்லாம் சன்மார்க்கப்பொதுவழி காட்டியவர் இராமலிங்க வள்ளல். அந்தக்காலம் அவரை அறியவில்லை. அவரைத் தூற்றிய புலவரும் சிலர் உண்டு. ஆனால் யாரைத்தான் உலகம் தூற்றவில்லை. புத்தரை, ஏசுநாதரை, முகம்மது நபியை, காந்தியை ஒறுக்க உலகம் சன்மார்க்க ஜோதியான இராமலிங்கரையும் பழி தூற்றியது. அந்த அருள்வள்ளல் மறுமொழி கூறாமல், மாறுசெய்யாமல் இறைவனுக்கே இசைவசையெல்லாம் அர்ப்பணித்துத் துரிய நிலையிலேயே ஆழ்ந்து மறைந்தார். இராமலிங்கர் பண்டிதக்கல்வி கற்கவில்லை. திருவருளால் வரும் கல்லாக் கல்வியே உள்ளக் கோவிலிலிருந்து பயின்றார். அவருக்குத் தொல்காப்பியம் ஒப்பிக்கத்தெரியாது! அவர்கற்ற ஐந்திலக்கணமே வேறு; அன்பு, அருள் ஒருமை, ஆன்மநேய உரிமை, தியானம் இந்த ஐந்துஇலக்கணமே உலக தீர்க்கதரிசியான மகான்கள் பயில்வனவாம். சூழ்ச்சி, பொறாமை, சிறுமை, செருக்கு வீண்வம்புப்பேச்சு, இந்த ஐந்தும் உருப்படா வீணரின் ஐந்திலக்கணமாம். எழுத்து சொல் பொருள் யாப்பு அணி இவற்றிற்குமேல் இசையிலக்கணமும் அருளியல் இலக்கணமும் உண்டு. இவற்றை மகான் ராமலிங்க வள்ளல் உள்ளார இறைவன் அருளால் அறிந்தார். அவர் எவர் மெச்சுதலுக்கும் பாடவில்லை. தவயோக சித்தியால் திருவருள் அளித்த ஆவேச வாக்குகளை உலகிற்குத்தந்தார். அவற்றை அவரது மாணவர் அச்சிட்டனர்.

நான் நீண்டகாலம் அருட்சோதி வள்ளலார் இயக்கத்துடன் தொடர்புகொண்டிருக்கிறேன், அவரது கையெழுத்துப்பிரதிகளை

ஆராய்ந்து அருட்சுடர் வள்ளலார் அருட்பா விளக்கம் இரண்டும் எழுதினேன். இன்று சென்னை அரசாங்கம் எங்களுக்குக் கொடுத்தமுன்னூறு ஏகரா நிலத்தில் சுத்தசன்மார்க்கசங்கம் நாட்டி அருட்சமயத்தை உலகெலாம் பரப்ப முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். இன்று இராமலிங்கசுவாமிகள் பெயர்சொன்னால் தமிழுலகம் கையெடுத்துக் கும்பிடும். அவர் வரலாற்றையும் அருட்பாவையும் நான் மஹாத்மா ராமலிங்கம் என்ற ஆங்கில நூலாக எழுதி வெளியிட்ட பிறகு அமெரிக்கா ஐரோப்பா நாடுகளிலும் வள்ளலார் உள்ளம் துடித்துவருகிறது. உலகதீர்க்க தரிசிகளில் வள்ளலாருக்குச் சிறந்த இடமுண்டு: சாதிமதசாத்திரகோத்திரச் சண்டைகளில்லாமல் உலகமெல்லாம் ஆன்மநேய ஒருமையில் ஒத்துவாழ வழிகாட்டினார் வள்ளலார். உள்ளத்தை அறியவேண்டும்,

இந்தச் சமயத்தில் இன்னொன்று சொல்லவேண்டும், அந்தக் காலம் நாவலருக்கும் வள்ளலாருக்கும் கொள்கை வேறுபாடுகள் இருந்தன. நான் அருட்பாவழக்கை முழுதும் சரியான ஆதாரங்களுடன் ஆராய்ந்தே நாவலர்பெருமானின் ஒரு அத்தியாயம்சேர்த்தேன்: நாவலர் கூறியகுறைகளையும் அதில் நேர்மையாக அவர் அறிக்கையிலிருந்தே எடுத்தாண்டேன். அந்த அத்தியாயத்தை நேர்மையான அன்பர் ஒப்பியபிறகுதான் நூலில் இணைத்தேன்.

ஆனால் இன்று அந்த அத்தியாயத்தை நீக்கிவிட்டேன்: சென்ற தைப்பூசத்திற்கு இரண்டு லட்சம் ஜனங்கள் வடலூரில் கூடினார்கள், அருட்பா மகாநாடு நடந்தது. எனது தலைமையுரையில் நாவலர் தமிழுக்குச் செய்த அரிய தொண்டுகளையும் வள்ளலார் உலகுக்கே செய்தபெரிய அருட்பணிகளையும் விளக்கினேன். என் அன்பிற்குரிய அறிஞர்சிலர் நாவலர் வரலாற்றில் இராமலிங்கவள்ளலார் பெயரேவரவேண்டாம். இவர் பணிவேறு அவர்பணிவேறு அருட்பாவழக்கை நாவலர் நூலினின்று எடுத்துவிடலாம் என்றனர். அப்படியே நாவலர் நூலினின்று வள்ளலார் சம்பந்தத்தையே நீக்கி இரண்டாம்பதிப்பிற்கு நூலைச் செப்பனிட்டுத் தந்திருக்கிறேன், ஆதலால் அனாவசியமான பேச்சு இனித்தேவையில்லை. நாவலரை நாவலராக மதிப்போம், அவரவருக்குரிய அருட்சோதியை அருட்சோதியாக மதிப்போம். அவரவருக்குரிய நிலையில் அவரவரை வைத்துப்போற்றுதலே தகுதியாகும்.

இன்று தமிழ்நாடெங்கும்சன்மார்க்க சங்கங்கள் எழுந்து அரியபணிநலம் பரவுகின்றன. நாத்திகமும் பத்தாம்பசலி மூடக்கொள்கைகளும் அட்டூழியம்செய்து முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைபோடும் இந்த நாளில், வள்ளலாரின் சுத்தசமரஸ சன்மார்க்கம் சமயசஞ்சீவிபோல் உதவும். வடலூர் சத்திய ஞானசபையில் தைப்பூச தரிசனம் செய்ய இலட்சக்கணக்கான மக்கள் கூடுகின்றனர். அருட்பெருஞ் ஜோதி தனிப்பெருங்கருணை என்ற மந்திரம் அவர்கள் உள்ளத்திலின்று எழுந்தொலிக்கிறது. சாதிமத பேதங்கள் இந்த மந்திரத்தைக்கேட்டு நடுநடுங்குகின்றன. நாடெங்கும் அருட்பா முழங்குகின்றது. இந்தக்காலத்தில் சென்று போன பழைய பயனற்ற விஷயங்களை நாம் மறந்து இனி நாடு முன்னேறும் வழியைப் பின்பற்றவேண்டும்.

மற்றச்சமயங்களெல்லாம் பெருகிக்கொண்டே போகின்றன, நமது சமயமோ அருகிக்கொண்டே போகிறது. பலநாடுகளைச் சுற்றிப்பார்த்த அனுபவத்தைக்கொண்டு தமிழருக்கு இதைச்சொல்லுகிறேன்.,—

1 தமிழன் ஒற்றுமை பெறவேண்டும். வேற்றுமையாக்கும் எந்த இயக்கத்தையும் வீழ்த்தவேண்டும்.

2 மனிதனை மனிதன் தீண்டாதவன் எனவெறுக்கும் மடச்செருக்கு நீங்கவேண்டும். திருக்குலத்தார் நமது சைவர். நம்மவருக்கு நாம் கொடுமைசெய்தால் பிறநாட்டார் நம்மைப்பார்த்துச்சிரிப்பர்.

3 கோயில் குளங்கள் பொது நிலயங்களெல்லாம் பொதுஜனங்களின் பணத்தால் நடப்பன. சாதிமத பேதமில்லாமல் எல்லோரும் யாங்கும் சென்று நலம்பெற வழிசெய்யவேண்டும், கோயில்களில் கூட்டுப்பிரார்த்தனைகள் வைத்து சமயத்தை சமரஸ நோக்குடன் பரப்பவேண்டும்: கோயில் அர்ச்சனைவழிபாடுகள் தமிழில் நடக்கவேண்டும். தமிழ்மக்கள் தமிழே அறிவர். சமுஸ்கிரத தெரியாதவர்கள் தமிழில் மந்திரங்களை எழுதிப்பாடம்பண்ணிக் கிளிப்பிள்ளைபோல் ஒப்பிக்கிறார்கள். சமுஸ்கிரதம் தெரிந்தவே தமறிந்த நல்லோர் அம்மந்திரங்களில் உள்ள அபத்தங்களைக் கேட்டு விசனப்படவேண்டியிருக்கிறது. ஒன்று நன்றாக அத்யயனம் செய்தவர்

கள் வழிபடட்டும். அல்லது தமிழில் அருச்சனை வழிபாடு நடக்கட்டும். தச்சவிர்வரேண்ய உச்சரிப்பால் பலன் ஏற்படாது, புங்குடுதீவு முனீசுரம் திருக்கோணமலை ஆகிய மூன்றிடத்திலேதான் சமுஸ்கிரத மந்திரங்களை நன்றாக உச்சரிப்பதைக்கேட்டேன். அப்படியிருப்பினும் சைவக் கோவில்களில் நாவலர் அருட்பாடல்கள் முழங்குதல் நலம்.

4 தமிழருக்குள் ஒருமையும் ஒற்றுமையும் வேண்டும்! ஒரு தமிழன் நன்மைசெய்யத்தொடங்கினால், அவனுக்கு எதிராடுவது தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடுவதாகும். காலத்தை அறிந்து கடமை அறிந்து தமிழர் நடக்கவேண்டும். உதாரணமாக தலவாக்கலையில் யோகசாதன வகுப்பு நடந்தது. ஒருவாரம் நடராஜா வழிபாடும் தமிழ் முறையில் வேதாகமப்பிரசங்கமும் திருமுறை பாராயணமும் நடந்தன: சாதிமதபேதமில்லாமல் எல்லாரும் சாதனையில் கலந்து நலம்பெற்றார்கள். தியானத்திற்கு எல்லாரும் அமர்ந்தார்கள்; புதிய பேரின்பத்தை எல்லோரும் உணர்ந்தார்கள். இதேமாதிரி கோயில்களைச் சாதனநிலையமாக்கினால் சன்மார்க்கம் முன்னேறுமே.

5 வெறும் விதண்டாவாதங்கள் யாராவது பேசத் தொடங்கினால் பதில்சொல்லிக் கொண்டு காலக்கொலை செய்யாமல் வெளியே எழுந்து வாருங்கள். காலம் சிறிது கடமைபெரிது நேராக அடுத்த கடமைக்குச் செல்லுங்கள், வீண்பேச்சர் பேசிக்கொண்டிருக்கட்டும், இந்தப்பேச்சுகள் காசுபெறாத குப்பைகள் என்பதை பொதுஜனங்கள் அறிந்து கொண்டிருக்கிறார்கள்,

6 இன்று பொது மக்கள் நன்றாக கண்விளித்தெழுந்தனர் அவர்களைப் பழைய மூடமந்திரங்களால் ஏமாற்ற முடியாது; அகண்ட சமரசவாழ்வை நோக்கிக்காலம் முன்னேறுகிறது இந்தக்காலத்தில் சுயநலச் சிறுமையும் பொறாமையும் அகந்தையும் காலத்திற்குதவாது வாய்க்குப்பையும் ஒதுக்கித்தள்ளவேண்டியகுப்பைகளே, யாராவது இந்தக் குப்பைகளைக் கட்டியழுதால் அழட்டும் என்று விட்டுவிட்டு நீங்கள் சிங்கக் கூட்டம் போல் எழுந்து தூயமெய்வழியில் முன்னேறுங்கள்.

# அருட்சோதி மாலை

திருப்பொதுவில் ஞானநடம் புரிகின்ற
தெய்வசிகா மணியின் சேயை
இருட்குலத்தைப் பெருக்குகின்ற மடமையிருள்
மாற்றவந்த இரவி தன்னைக்
கருக்கணக்கில் லாதவனைக் காலனணு
காத கனல் மேனியானை
அருட் சமயத் தந்தையினை அன்பருக்குத் தாயானை
அடைந்து வாழ்வாம்.

எத்தனையோ தத்துவங்கள் அத்தனைக்கும்
இசைவாகி அவற்றின் மேலாய்
ஒத்துலகில் எல்லாரும் ஒருகுலமாய்
அருட்பொதுவிற் செழிப்புற் றோங்க
சுத்தசிவ சன்மார்க்க சங்கத்தை
முறைவகுத்த சோதி தன்னை
சித்தெல்லாம் வல்லவனைச் சிவஞான
தேசிகனைச் சிந்தை செய்வாம்,

68-ம்பக்கத் தொடர்

கள், உள்ளத்தில் திருவாசகமும் வாழ்க்கையில் திருக்குறளும் உணர்வில் அருட்பாவும் செயலில் காந்தியுபதேசமும், கொண்டு முன்னேறுங்கள்; புத்தர் கருணை ஏசுபத்தரின் தியாகசேவை, இஸ்லாமியதெய்வபத்தி, வேதாந்தத்தின் தன்னறிவு, சித்தாந்தத்தின் பதிஞானம் வள்ளலாரின் சன்மார்க்கம் திருமூலரின் பூரணசத்தியோகம் இவையெல்லாம் இணைந்தசுத்தயோகசித்தராக உலகில் முன்னேறுங்கள்-

ஊனுருவி உயிருருவி யுள்ளுருவிப்
பாய்ந்தின்ப ஊற்றெடுக்கும்
தேனருவி யாகிவளர் தெய்வீகத்
திருவருட்பா செழித்த ஊற்றை
மானவர்க்குப் புதுவழியும் புதுயுகமும்
புதுவாழ்வும் வழங்கினனை
வானரசைக் கொணர்ந்தானைத் துரியவள
நாட்டரசை வழுத்திநிற்பாம்.

திணைத்துணையும் பேதமின்றிச் சீவகா
ருண்யவழி சேர்ந்து வாழ
மனத்திருளை மாற்றியறி வானந்தத்
துரியமலை வளாநா டேற்றி
நினைந்திடவும் முடியாத நிலைக்கு நம்மை
யழைத்தானை நேரில் ஓர்நாள்
அனைத்துலகும் அறிவானைத்
தமிழர் இன்னும் அறியானை
யணிந்து வாழ்வோம்.

பலமதங்கள் ஒன்றெனவே மேற்கினிலும்
கிழக்கினிலும் பகருமுன்பே
தவமுயரும் தமிழ்நாட்டில் அருளான்ம
சமரஸத்தை நாட்டி னனை
நலமுயரும் குருமணியை நவயுகத்து
நபிமணியை இன்பமோங்கி
உலகுயரும் தவமணியை உண்மையறி
வொளிமணியைப் போற்றுவோமால்

# வள்ளலார் விளக்கிய

# நலம்பெற்ற வாழ்வு,

[ஸ்ரீமத் சித்பவானந்த சுவாமிகள்]

---

மனிதன் உலகிலே வாழ்ந்திருக்க உண்ணவேண்டும். சன்மார்க்க வாழ்விலே வாழும் ஒருவனுக்கு அவ்வுணவு இரு வகையினதாக அமைகிறது. உடலுக்குவளர்ச்சிதரும உணவு. உள்ளத்திற்கு வளர்ச்சிதரும் உணவு உடல்வளர்ச்சிக்கு ஊட்டப்படும் உணவு சுத்தமுற அமையுமானல் உள்ளமும் சுத்தமுறுகிறது மனம் சுத்தமடையுமானல பேரியல்பிலே ஞாபகம்செல்லுகிறது. பேரியல்பைமறந்த நிலையே சிறுமைக்குக் காரணமாகிறது. நாம் எங்கிருந்து வந்தோம் என்பதைச் சிந்திக்கவேண்டும், கடலில் தோன்றிய நீர் கடலை நோக்கிப்பாய்கிறது. அதே பாங்கில் சித் பொருளில் தோன்றிய ஜடம் அதை நோக்கிச் செல்வதும் இயல்பேயாகும் இவ்வியல்புக்கு மாருன மறதியே சிறுமைக்குக் காரணம்: உயிர்களின்–ஜடப்பொருள்களின் பிறப்பிடம் எதுவோ அதைப்பற்றிய உறுதியான ஞாபகம் எப்போதும் இருக்கவேண்டும். அந்தஞாபகம் நிலைத்திருக்க அந்தக் காரணசுத்திவேண்டும்- இதைத்தான்

---

மருட்சமய வாதுகளும் மாமாலச்
சடங்குகளும் மண்ணைக் கௌவ
இருட்சாதி வேற்றுமைகள் இடர்செய்யும்
பிரிவினைகள் இரிந்து தேய
பொருட்செறிந்த மணிவாக்கும்போதுநலஞ்செய்
புண்ணியமும் பூண்டெழுந்த
அருட்சோதி ராமலிங்கப் பெருமானின்
அடிமலர்கள் முடியில் வைப்பாம்,

சித்தானந்த பாரதி

திருக்குறள் "மனத்துக் கண்மாசிலனாதல்அனைத்தறன்" என்று முரசு அறைகிறது. நல்லுணவால் எவ்வாறு உடல் உறுதியுற்று நலம்பெற்ற வாழ்வு அமைகிறதோ அதேபாங்கில் அறத்தைக் கடைப்பிடிப்பதால் மனதில் தெளிவு அமைகிறது. நல்லுணர்ச்சி மிகுகிறது: நல்வாழ்வு மலர்கிறது: இந்தநல்வாழ்வு மலரவேண்டுவனயாவை? இதை வள்ளலார்தெளிவுற அறிவுறுத்தத் திருவாய்மலர்ந்த ஒருஅருட்பாவிலே தந்ததுபதினொரு பாங்கிலே விரிகிறது. அந்தஅருட்பா "ஒருமையுடன் நினது திருமலரடி" எனத் தொடங்குகிறது:

முதலாவது:– "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவுவேண்டும்" என்பது சுவரின் நிறத்திற்கேற்ப அதில் வாழும் ஜந்துக்கள்வாழுமிடத்திற்கேற்ப சரீரத்தில் அதன் புறத்தோற்றம் அமைவதுபோல சத்சங்க சகவாசத்தால் மனிதனது அகத்தோற்றம்மாறுதலடையும் சத்சங்கத்தின் சேர்க்கையை ராமக்கிருஷ்ணர் கழுநீருக்கு ஒப்பிடுவார், கள்ளுண்டு போதை மிகுந்திருப்பவனுக்கு கழுநீரைத்தந்து குடிக்கும்படி செய்தால் போதை தணிந்து அறிவு தெளிவுறும். அதே போல சத்சங்க சகவாசத்தால் ஒருவனது இகபோக போதை தணிந்து இறைஞானம் மிகும். நினைப்பெல்லாம் இறைமயமாகும். மனத்தையுடையவன் மனிதன், ஓயா தநினைப்பே மனித உருவம். நல்லநினைப்பால் நல்ல உருவம்; தீயநினைப்பால் தீய உருவம். கப்பலில் திசைகாட்டிக்கருவியிலுள்ள காந்தஊசி சுழற்காற்றிலே, நீர்ச்சுழலிலே, கப்பல்அல்லலுறும்போது, திசையறியாது மயங்கும்போதுவடதிசையைக் காட்டிக்கொண்டே இருக்கிறது, அதுபோல உலக அல்லல்களிலே சிக்கி அவஸ்தையுறும்போதும்மனது இறையிடம்பதிந்திருக்குமானால் வாழ்வு நல்வழியில் திரும்பும் மனத்தை இறையிடம் பதிந்திருக்கும்படி செய்வதில் சத்சங்க சகவாசம் சிறந்த மருந்தாகும்.

இரண்டாவதாக "உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" சன்மார்க்க வாழ்வுக்கு நல்லிணக்கமே வேண்டப்படுவது எண்ணமும் பேச்சும் முரண்படக்கூடாது திரிகரணம் ஒத்திருக்கவேண்டும். மாறுன பாங்குடையவருடன் உறவுகொள்ளல் நலமன்று. இராவணன் ஆற்றல்மிக்கவன்தான். எனினும் திரிகரணசுத்தி அவனிடம் இருந்ததில்லை; அவன் சீதையை அபகரித்துச் செல்லவந்தான், அப்பொழுது சன்

னியாசிவேடம் பூண்டுகொண்டான்' அவன் மனதில் குடிகொண்டிருந்தது காமம், புறத்தே வேடத்தில் காட்டிக்கொண்டது காமமின்மை. இப்படி வெளிவேஷம் ஒன்று. மனத்துள் எண்ணம் வேறென்று என்ற முரண்பாடே அவனை அழித்துவிட்டது. அவன் உள்ளொன்று வைத்துப்புறம்பொன்று நடித்துக் காட்டினன்.

இனி மூன்றுவதாக; "பெருமைபெறும்நினதுபுகழ்பேசவேண்டும்" "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு" என்னும் குறளுரையிலே இவ்வுண்மை கூறப்பட்டுள்ளது. நரஸ்துதி அழிவுப்பாதையில் சேர்க்கும். மனிதனைப்புகழ்வதெல்லாம் பொருள் சேராத புகழ்ச்யாகும், பொருள் சேராத புகழ்ச்சி பொய் பேசுவதற்கு ஒப்பானது, பேசுவதால் மனது மாசு உறுகிறது. இறைவனைப் புகழ்வதெல்லாம் பொருள் சேராத புகழ்ச்சி. வாய்மை எனப்படுவதும் அதுவே. மனத்தெளிவுக்கு அது உற்றதுணை.

நான்காவதாக:– பொய்மை பேசாதிருக்கவேண்டும் சத்தியமே பேசவேண்டும் என்பது கருத்து, சத்திசொரூபமாகியதெய்வத்தின் மகிமைகளையெல்லாம் விளக்குதற்கேற்ற சொல்லும் செயலும் யாரிடத்தமைகிறதோ அம்மனிதன் சத்தியம் பேசுகிறுன்; அழியும் பாங்குடைய இப்பிரபஞ்சத்தைச்சார்ந்த வாழ்வும், இதில் ஏதோ தாற்காலிகமாக சில வசதிகளைப் பெறுதற்கென்று பேசுகின்ற பேச்சும் பொய்மைகளாம். இறைவனைக் குறித்த பேச்சே மெய்ம்மை, உலகைக்குறித்த பேச்செல்லாம் பொய்ம்மை:

ஐந்தாவதாக;- அருட்பாவில் கூறப்படுவது "பெருநெறி பிடித்தொழுக வேண்டும்" பெருநெறி பிடித்தொழுகுவதே வாழ்வின் பயன். பெருநெறியாவது விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும்; பாரமார்த்திக வாழ்வில் சிறப்புற்றிருக்கவே இப்பிறவி இறைவனுல் தரப்பட்டது. அவ்வாழ்விலே வாழ்வாங்கு வாழ்தலே அறிவுடைமையாகும்.

ஆறுவதாக:- "மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்" மதம் ஆணவமாகும், பாரமார்த்திகப் பெருவாழ்வில்

இந்த ஆணவம் வருமானால் அது தீர மருந்தேயில்லை. கடவுள் வழிபாட்டிலே செருக்குக் கொள்வது கடுகிலே பேய் புகுந்தது போலாகும், என்று ஸ்ரீராமக்கிருஷ்ணர் கூறுவார். பேய் பிடித்தவர்களுக்குக் கடுகு மந்திரித்தால் பேய் நீங்கும். கடுகிலேயே பேய் புகுந்துவிட்டால் என்செய்வது?

ஏழாவதாக:- "மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும்" பரமஹம்ஸர் கூற்று ஒன்று உள்ளது. "காமன் உள்ள இடத்தில் ராமன் இருக்கமாட்டான்" என்று இவ்விரண்டும் ஒன்றற்கொன்று மாறுபாடானவை. இருளும் ஒளியும்போல ஒன்றுகீழ் எண்ணம் மற்றொன்றுமேல் எண்ணம். கீழ்எண்ணத்துக்கு தகாது இடந்தருதல் கீழ் எண்ணம் மேலிடும் போதெல்லாம் ஆணும் பெண்ணும் பரம்பரம் சிவசொரூபம் என்றும் சத்திசொரூபம் என்றும் தங்கள் மேலான இயல்பை மனதில் உறுதியாக்கிவைத்துக் கொள்வார்களானால் காம நோய் அகன்றுவிடும்.

எட்டாவதாக:- "உனைமறவாதிருக்கவேண்டும்" நமக்குவேண்டிய உறவினர் ஒருவர் இறந்து விட்டால் எத்துணை அளவு வருத்தந் தெரிவிக்கிறோம்! துக்கத்தில் ஆழ்ந்து நாட்டம் செலுத்திவிடுகிறோம்: அவ்வேளையில் உடல் சம்பந்தமான சிற்றின்பத்தைச் சிறிதும் நினைக்கமுடியாது. மாறுபடும் இரண்டு எண்ணங்கள் ஏககாலத்தில் மனதில் குடிகொள்ளுதல் இல்லை. மடிந்துபோன உற்றாரைக் குறித்து வருந்தும் வேளையில் காம நோய் தோன்றாதிருப்பது போன்று இறைவனைக் குறித்து ஆழ்ந்து எண்ணியிருக்கும் வேளையிலும் காம உணர்ச்சி தலை எடுக்காது. உனைமறவாதிருக்கவேண்டும் என்பதன் பொருள் இதுவேயாகும்.

அடுத்தது:- "மதிவேண்டும்" அதாவது நல்லறிவை நாம் பெறுதல் அவசியம், மெய்ப்பொருள் உணர அறிவு முற்றிலும் அவசியமானது. உய்த்துணரவும் பொருள் சேர்க்கவும் பௌதிக ஞானம் பெறவும் இவ்வறிவன்றோ துணை புரிகிறது? நல்லது கெட்டது ஆகிய இரண்டுக்கும் அறிவைப்பயன்படுத்திக் கொள்ளலாம் அதைக் கெட்டதுக்குப் பயன் படுத்துகின்றவர்கள் கழுகுபோன்றவர்கள். அது வானத்தில் உயரப்பறக்கின்றது. நெடுந்தூரம் பார்க்கும் வல்லமையும் அதற்குண்டு. அப்படிப்பறப்பது பார்ப்பது எல்லாம் எங்கே செத்து அழுகிப்போன பிணம் கிடக்கிறது என்னும் கருத்துடனும். அதே பாங்கில் பிறரை ஏமாற்றவும்

பிறரோடு போட்டி போடவும் சிலர் தங்கள் அறிவைப் பயன்படுத்துகின்றனர். கீழான அப்போக்கு உதவாது. தன்போன்ற மற்ற உயிர்களையும் உயர்ந்ததாக்கி ஈசனுக் காளாக்கத் திருவினை புரியமுற்படுகிறது பேரறிவு. இப்பேரறிவை வளர்ப்பதே மானுடப்பிறவியின் பெருநோக்கமாகும். மதிவேண்டும் என்பதன்பொருள் இதுவேயாம்.

"நின்கருணை நிதிவேண்டும்" என்பது பத்தாவது. விஞ்ஞான அறிவை இக்காலத்திய மக்கள் அழிவுக்கென்றே பயன்படுத்தி வருகின்றனர். விஞ்ஞான உலகிலே கருணைக்கு இடமில்லாது போய்விட்டது. புராண நூல்களிலே சிவபெருமான் தக்கன்வேள்வி தகர்த்த வரலாறு பேசப்படுகிறது. அதன் உண்மையை இங்குச்சிந்திக்க உரியது தக்கன்வேள்வியிலே சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் அழைப்பில்லை: இடமில்லை, அருளுக்கும் அறத்துக்கும் இடமில்லை என்பதே அதன் பொருள். வேள்வியின் முடிவென்ன? துன்பம் —அழிவு - அமங்கலமாம். என்? அருளும் அறமும் இன்றிச் செய்யும் எச்செயலும் தீச்செயலே: அருளும் அறமும் கருணையின் இருஇயல்புகள். கருணையே அளவற்றநிதி. அந்தநிதியை நாம்பெற்றுப் பேரின்ப வாழ்விலே சிறந்திருக்கவேண்டும். சன்மார்க்கத்தின் மூலசூத்திரம் கருணை. இறைமையின் உயர்வடிவம் கருணை. உலகை இயக்குவதும் கருணை. தனிப்பெருங்கருணை.

"நோயற்ற வாழ்வில் நான் வாழவேண்டும்" என்பது பதினோராவது நெறியாகும். நோய் உடலுக்குரியதே அன்றி ஆன்மாவைப் பற்றுவதன்று: காமத்தால் உடல் புண்பட்ட பழங்கருவி என்று எண்ணப்படும். கையாளும் முறை தெரிந்தால் இவ்வுடல் இறைவன் நீங்காது வாழத்தகுந்த ஆலயம்: காட்டிலே வளரும் சிறு நாணல். அதைத் துவாரமிட்டுக் கையாளப் பழக்கப்பட்ட இசைவல்லான் ஒருவன் உயர்ந்த பண்ணை இசைப்பானுல் உலக மறதி ஏற்படுகிறது. அதீத நிலையை அடைகிறோம். உடலைப்பற்றிய நினைப்புள்ளவரையில் மனிதன் நோயாளியே: நிழல் நம்மை சார்ந்து வருவது போல ஆன்மாவை உடல் சார்ந்து வரும். அவ்வுடலைப்பற்றிய நினைவு நமக்குண்டாகுமானுல் அது நோயுற்ற வாழ்வு, உடலைப்பற்றிய நினைவற்ற நிலையே நோயற்ற வாழ்வு, அவ்வகை வாழ்வே சன்மார்க்கி ஒருவன் வேண்டுவது.

இனி, முன்னர் கூறியபடி நம்மைநாம் மேலோராக மாற்ற முடியும், உயர்ந்தபாங்கிலே நினைப்பிருக்குமானால், ஜீவன் அழுது கொண்டு பிறக்கின்றான். மக்கட்பேறு அமைந்ததென்று உலகம் அவனை உவப்போடு வரவேற்கிறது. கதிரவன் நாட்களை அளந்து கொண்டே செல்கிறான். அப்படிக்காலம் கழிகிறது. உடலையுருக்கும் தருணம்வருகிறது. அதற்கிடையில் மானுடவாழ்வு பாராட்டுதற்குரிய பெருவாழ்வாக அமைவது உசிதம் உடலை உருக்குங்கால் தான் எடுத்தமானிடப்பிறவி நன்கு பயன் படுத்தபட்டதென்று அந்த ஜீவன் அதை மகிழ்வோடு ஒதுக்கிவிடும். பரிபாகம் சன்மார்க்கத்தினின்று வருகிறது. அழுதுகொண்டு பிறந்தவன் மகிழ்வுடன் மண்ணுலகை விட்டேகுகிறான். பிறக்குங்கால் உற்றார் என்பார் மட்டும் வரவேற்றனர். இவ்வுலகை விட்டேகுங்கால் உலகத்தவர் பலர் நல்லான் ஒருவன் நம்மைவிட்டு ஏகிறான் என்று வருந்துவார்களானால் அந்த ஜீவன் வாழ்ந்தநல்வாழ்வுக்கு ஏற்ற அறிகுறி அதுவேயாகும். ஆகஒவ்வொரு ஜீவனும் தன்னை மேலோனாக மாற்றி அமைத்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறான்.

---

# உபதேச மொழிகள்.

(பாபாஜி)

இன்று செய்யக்கூடியதைநாளைவரை தள்ளிப் போடாதே.

❁ ❁ ❁

நித்தியமும் சிலமணி நேரம் தனிமையில் இரு.

❁ ❁ ❁

பேசுமுன்னர் இருமுறை சிந்திக்கவும்; செய்யுமுன்பு மும்முறை சிந்திக்கவேண்டும்,

❁ ❁ ❁

மற்றவர்களிலுள்ள நல்ல அம்சங்களையே கவனி.

❁ ❁ ❁

வாழ்க்கை குறுகியது, காலம் பறக்கிறது; விழித்திரு; எழுந்திரு, ஆத்மனை அனுபவத்தில் அறிக; இவை கூட மறைந்துவிடும், இன்பதுன்பத்தில் மனம் சமமாயிருத்தல் வேண்டும்.

# உண்மைத் துறவு.

தென்னுபிரிக்கா டர்பன் திரு ச—ம பிள்ளை அவர்கள்

"துறவு" என்பதன் பொருள் யாது? "துறவு" என்றால் "விடுதலை" என்பது பொருள், உலகத்தை எவரேனும் ஒழிக்க முடியாது? உலகத்தை எவரேனும் ஒழிக்கமுடியுமா? உலகத்தை விட்டுச்செல்ல வேண்டுமாயின் உலகத்தின் எல்லையைத் தாண்டி அப்பாற்போகவேண்டும்; உலகத்தை ஒழிக்க வேண்டுமாயின் பகவானது படைப்பினை ஒழிக்கும் திறமையை ஒருவன் பெறவேண்டும். இவ்விரண்டும் செய்தற்கு அரியனவேயாம்:

ஆனால் ஒருவர் பின் வருமாறு கேள்விகேட்கலாம், மனிதர்கள் கூடிவாழும் உலகில் ஆசையை விளைக்கும் பொருள்கள் நிறைந்துள்ளன. இங்கே வாழ்வதால் மனிதர் கேடடைகின்றனர், ஆனால் கானகத்திலே தனியான இடங்களிலே மனிதனை மயக்கும் பொருள்கள் இல்லாமையால், நாட்டைவிட்டுக் காட்டுக்குச்செல்லுதல் துறவாகுமன்றோ?

இதற்குப் பதிலாகக் கூறக்கூடியதாவது இது உண்மைத்துறவாகாது. மயக்கும் பொருள்கட்கு மத்தியில் நாம் வாழாது அவை இல்லாத இடத்தில் வாழ்ந்தாலும் பயன்யாது? இது பலாத்காரமாக இந்திரியங்களைப் பட்டினிகிடக்கச்செய்வதேயாகும், பட்டினியாயுள்ளவரை இந்திரியங்கள் பொருள்களை நாடமாட்டா: என்றாலும் பற்றுதல் மனத்தினுள்ளே குடிகொண்டிருக்கும். மறுபடியும் இந்திரியங்கள் மயக்கந்தரும் பொருள்கட்கிடையே வாழ நேரும்போது, உள்ளிருக்கும் பற்று குதித்தெழுந்து, மனிதனைத்தன் வசப்படுத்திக்கொள்ளும் இதற்கிரண்டு பெரியார்களின் சரித்திரங்கள் சான்று பகர்கின்றன.

ஜடபாதர் நாட்டைத்துறந்து காட்டில் வாழ்ந்தவரேனும், அந்திம காலத்தில் ஒரு மான்குட்டியின் மீது பற்று மிகுந்தவரானார். இதன் பயனாக ஒரு மான் பிறவியை எடுத்து அலையவேண்டியிருந்தது, இன்னோர் உதாரணம் ஸௌபரி முனிவர். இவரும் உலகவாழ்வைத் துறந்து கானகத்தே வாழ்ந்தவர். ஆயினும் ஒரு பொய்கையில் குளிக்கச் சென்றபோது, ஒருதாய் மீன் தனது குஞ்சுகளோடு உற்சாகமாக நீந்துவலதக்கண்டதும், அந்த இன்ப

த்தில் மயங்கியவராய்; பல பெண்களை மணந்து குழந்தையைப் பெறலானார். ஆதலால் உண்மையான துறவாவது மனத்துறவே. அதாவது, நம்மாழ்வாரும் பிற மெய்யன்பர்களும் கூறியபடியே "யான்" "எனது" என்னும் உணர்ச்சியைக் கிளம்பவொட்டாது. தடுத்து வேரோடு மாய்ப்பதேயாம்.

"யான்" எனும் அகங்கார உணர்ச்சியானது, உடலையும் மனத்தையும் ஆன்மாவாகக்கருதும்தவறான உணர்ச்சியே "எனது" எனும் மமகார உணர்ச்சியாவது உடலுக்கும் மனத்திற்கும் சொந்தமானவற்றை, ஆன்மாவுக்குச் சொந்தமாக மயங்கிக் கருதும் உணர்ச்சியாம். துறவாவது, இத்தவறான பாதைகளினின்றும் மனதை விடுவித்தலேயாம்.

இத்தகைய மனத்துறவிற்கு உதாரணங்களை ஜனக மன்னரிடத்தும், குமரேச ஆழ்வாரிடத்தும், பின் வருவனவற்றிலிருந்து அறியலாம். சுக முனிவர் ஜனக மன்னர்க்கும் அவரது அரண்மனையிலே கூடியிருந்த ஏனைய இருடியர்க்கும் உபதேசஞ்செய்து வந்தார். உபதேசிக்கும் போது அவர் எப்போதும் தமது பார்வையை அரசர்மீதே செலுத்தி வருவதன்றி; பிற இருடியரை நோக்கவும் செய்தார். இவரது செயலைப் பிழைபட அறிந்தபிறர் அரசரிடமிருந்து சுகர் உலகப்பொருட்களைப் பெற விரும்பி அவ்வாறு செய்தார் எனக்குறை கூறலானார். இதை அறிந்தசுகமுனிவர், பிறரினும் ஜனகர் ஞானமேம்பாடுடையவர் என்பதை அனைவர்க்கும் முன்னும் நிலை நாட்டுதற்காக ஒரு சோதனை செய்யலானார்.

தமது மனோசக்தியால் ஜனக மன்னனது தலை நகராகிய மிதிலை தீப்பற்றி எரிவதாகவும்; அதற்கருகேயுள்ள இடத்திலுள்ள முனிவரது குடிசைகளும் தீக்குஇரையாவது போலும், ஒரு தோற்றத்தை உண்டு பண்ணினார். இதைக் கண்டதும் இருடியர் மனம் பதறியவராய் எழுந்து என் கமண்டலம் என்னாயிற்றோ? எனது மான்தோல் எரிந்துவிட்டதோ? எனது கிழிந்த ஆடைகள் வெந்துபோயினவோ?என் படுக்கையின் கதிஎன்னவாயிற்றோ என்றெல்லாம் கூக்குரலிட்டுக் கொண்டே நாற்றிசையும் ஓடலானார். ஆனால், ஜனக மன்னரோ, மன அமைதியோடும் சற்றும் பற்றின்றியும் அமர்ந்திருந்து, தமது கண் முன்னே பொக்கிஷம் பற்றியெரியக்கண்டும் "மிதிலை எரிந்தால், அந்நகர் தானே எரிந்

தது. அதனால் நமக்கென்ன" என்றனர். இருடியரோ தமது குடிசைகளைக்காண ஓடிச்சென்று, அங்கே ஒன்றும் எரியாததைக் கண்டு, ஆச்சரியமுற்றுத்திரும்பினர். திரும்பியதும் மன்னரின் மனநிலையை உணர்ந்து, நாணத்தால் தலை கவிழ்ந்து சுக முனிவர் முன்நின்றனர். சுகமுனிவரும் அங்கிருந்தோரை நோக்கி, யான் ஜனக மன்னரிடம் சிறப்பாகக் கவனஞ் செலுத்தும் காரணத்தை நீர் அறிந்திரோ? அவரிடம் மெய்த்துறவு குடிகொண்டுள்ளது, என்று மொழிந்தார்.

குலசேகர ஆழ்வாரும் மன்னரது பதவியிலிருந்தும், நெஞ்சார இறைவனிடத்து "ஊன் ஏறு செல்வத்து உடற்பிறவி யான் வேண்டேன்" (உடலை வளர்க்கும் செல்வமிருந்த இவ் உடற் பிறவியை யான் விரும்பேன்) என்றும், "இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான்வேண்டேன்" என்றும் கூறியவைராக்கிய சீலராயிருந்தார்.

அறங்களைச் செய்து வரும் இல்லறத்தானை விடக்கோடி அதிகம் இல்லம் துறந்தான்," அவனிலும் நூறு கோடி அதிகம் உள்ளத்துறவு (மனத்துறவு) உடையவன்' என்றார் பட்டினத்தடிகள்

பாகவதத்தில் பிரம்மா பிரியவிருத அரசனுக்கு "இந்திரியங்களை வென்றவனும், ஆத்மானந்தத்தில் நிலையாயிருக்கும் ஞானியும் ஆன ஒருவற்கு, இல்லமே வனத்திலுள்ள முனிவரது ஆசிரமமாம்: அவனை மனைவாழ்க்கையின் குற்றம் என்னசெய்யக்கூடும்? என்று போதித்தார்.

கீதையிலே உண்மைத் துறவைப்பற்றிப் பின் வருமாறு பகவான் வற்புறுத்துகிறார்: "எனக்குச் செய்யவேண்டியது மூவுலகத்தும் யாதொன்றுமில்லை; பார்த்தா; யான் அடையாததும் அடையத்தகுந்ததும் ஒன்றும் இல்லை. ஆயினும்கருமத்தை இயற்றி வருகிறேன்.

இயேசு கிறிஸ்து கூறியதாவது:- "என்னிடம் வந்தும், தனது தாயின் மீதும், தந்தைமீதும்; மனைவி மக்கள் உடன் பிறந்தோர் மீதும்; தனது சுயவாழ்வின் மீதும் பற்றை அறுக்க மாட்டானாயின் அவன் எனது சீடனாக முடியாது!"

---

# விபூதி

## விபூதி என்பது யாது?

புல்வெளியில் மேய்ந்த இளம்பசுவின் சாணத்தை அக்கினியால் நீற்றி எடுக்கும் பொடியே விபூதியாம்.

## விபூதியை வைத்துக்கோள்வதெப்படி?

புதுத்துணியால் வடிகட்டி மணமுள்ள புஷ்பங்களை இட்டு புதுப்பானைகளில் வைத்துக்கொண்டு அவசியத்திற்குத் தக்கபடி பட்டுப்பையிலாவது சம்புடத்திலாவது எடுத்துவைத்துக் கொள்ளவேண்டும்.

## விபூதியணிவதின் அவசியமென்ன?

அசுத்தங்களைச் சாணம் அகற்றுவது யாவரும் கண்டறிந்த உண்மை. அதுபோலவே நமது உடலிலுள்ள அசுத்தங்களை அகற்றவும் சாணத்திலிருந்து தயாரிக்கப்படும் விபூதி மிகவும் அவசியமானதாகும். சிரசிலுள்ள நீர்த்தோஷம், தலைவலி முதலியவற்றை அகற்றவும் இது பயன்படுகிறது.

அன்றியும் இத்திருநீறு "முடிவில் யாவரும்பிடிசாம்பராவர்" என்ற உண்மையை நமக்கு உணர்த்தி "நீயும் இத்தகைய நீறாய்ச் சிறிதுகாலத்துக்குள் முடிவாய் ஆதலால் உன் வாழ்க்கை தூய்மையுடனும் இறைவன்மீது உற்ற பற்றுடனும் இருத்தல் வேண்டும்" என நம்மை எச்சரிக்கின்றது. பசுவின் மலம் நீறாகிய பின்னரே ஜீவன் சிவனாகிறான் என்ற தத்துவத்தையும் இது வெளிப்படுத்துகிறது. எனவே, விபூதி மதசம்பந்தமாகவும் பயன் படுதலில் நமக்கு இது இன்றியமையாததாகும்.

## விபூதியைத்தரிப்பதெப்படி?

வடக்குமுகமாகவேனும் கிழக்குமுகமாகவேனும் நின்று பூமியில் விபூதி சிந்தாதபடி மூன்றுவிரல்களால் எடுத்து அண்ணாந்து சிவ சிவ என்றுசொல்லி சிவனை த்தியானித்துப் பூசுதல் வேண்டும்,

## எப்பொழுதெல்லாம் விபூதி அணிதல் வேண்டும்

காலை மாலைகளிலும் குளித்தவுடனும் பூஜைக்கு முன்னும் ஆலயவழிபாட்டிற்கு முன்னும் சாப்பாட்டிற்கு முன்னும் அணிதல் வேண்டும்.

காணவினியது நீறு கவினைத்தருவது நீறு
பேணியணி பவர்க்கெல்லாம் பெருமைகொடுப்பது நீறு
மானந்தகைவது நீறு மதியைத்தருவது நீறு
சேணந்தருவது நீறு திருவாலவாயான் றிருநீறே.

பூசவினியது நீறு புண்ணியமாவது நீறி
பேசவினியது நீறு பெருந்தவத் தோர்களுக்கெல்லாம்
ஆசைகெடுப்பது நீறு அந்தமதாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவாலவாயான் றிருநீறே.

(திருஞான சம்பந்தமூர்த்திநாயனுர்)

பிணியெல்லாம் வரினும் அஞ்சேன் பிறப்பினேடிறப்பும் அஞ்சேன்
துணிநிலா அணியினுல் தன் தொழும்பரோடழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்துங்காணுச் சேவடிபரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே.

[மாணிக்கவாசகசுவாமிகள்]

---

# உபதேச மொழிகள்

[பாபாஜீ]

மதத்தின் தோற்றங்கள் மாறுபடினும் அதன் சாரம் ஒன்றே அறியாதோர் மதத்தின் பெயரால் பூசலிடுவர். ஒருவரை மற்றொருவர் பொறுப்பர், ஆனுல் அறிந்தோர் தமக்கேற்றசமயக்கோட்பாட்டைப் பின்பற்றி எல்லாமதங்களையும் கௌரவப் படுத்துவர். உதாரணமாக ஹிந்து மதம் எனப்படுவது பலமதங்களின் ஐக்கியமன்றி வேறல்ல,

குறை கூறுதே எல்லா மகான்களையும் மேன்மைப் படுத்து அவர்களுக்குச் சேவை செய்; அஃத சமயம் உமது சத்குரு தேவருக்குச் சகலமும் தியாகம் செய்க:

# வடலூர்

# சுத்தசன்மார்க்க நிலையப்பதிகம்.

[கவியோகி சுத்தானந்த பாரதியார்
நிலையத்திற்கு அஸ்திவாரக் கல்நாட்டிப் பாடியது]

சித்தமே சிவமாய்ச் சேவையே தவமாய்த்
திருவருள் ஆட்சியேகுறியாய்
ஒத்தநல் ஆன்ம நேயமே உயிராய்
உலகெலாம் கருணையே நிலவச்
சுத்தசன் மார்க்க நிலையத்தில் யோக
சித்தியாம் சுடர்விளக் கோங்க
நித்தியம் இங்கே நின்றெமை நடத்தாய்
நெஞ்சிலே நிறைபரம் பொருளே!

யான்என தென்னும் இனச்செருக் கின்றி
இழிமனச் செருக்குக ளின்றி
வான்குடை நிழலில் வள்ளலே யுனது
வளம்பெறுந் திருவருளாலே
ஊன்வளர் உயிர்கள் அன்புயி ராகி
ஒருமையும் உரிமையும் பேணி
ஆன்மநே யத்தில் அமைந்திடும் பணிக்கே
அமைந்தெமை நடத்துவாய் அரசே!

கொலைபுலை களவு குடிமடி சூது
குணங்கெடுங் காமநோ யின்றி
கலைவளர் அறிவும் கையிலே தொழிலும்
கருத்திலே கடவுளுங் கொண்டே
மலைவளர் அருவி போலவே யுதவி
மன்னுயிர் உய்திடத் தூய
நிலையமிங் கெழுக நின்னரு ளாலே
நெஞ்சிலே நிறைபரம் பொருளே!

உண்மையும் அன்பும் அருளுடன் அறிவும்
ஒருமையும் தூய்மையும் போற்றி
வண்மையும் அறமும் வளமையும் பெருக்கி
வள்ளுவர் குறள்வழி வாழ்வோம்!
தண்மையும் ஆத்ம சக்தியும் வீரத்
தணலுடன் சுதந்தரம் பொலிய
விண்மலர்க் குடைக்கீழ் விளங்கிட வருளாய்
வேதவான் விளக்கொளிச் சுடரே!

பலபலசாதி மதங்களை வேண்டோம்
பலபல கட்சிகள் செய்யும்
கலகங்கள் வேண்டோம் கட்டுகள் வேண்டோம்
கருணையில் லா ஆட்சியைவேண்டோம்
நலம்பெற வுழையாச் செல்வத்தை வேண்டோம்
நாதனே பொதுநடத் தரசே
உலகெலாம் உனது திருவருட் பொதுவில்
ஓங்கிடும் ஒருமைவேண் டுவமே!

சுத்தமே கடவுள் சத்தியே வடிவம்
சூரியவான் சோதியே விளக்கம்
சத்திய சாந்த சுத்தசன் மார்க்க
சாதனமே எங்கள் சமயம்!
வித்தகமூலர் வள்ளலார் முதலோர்
விளம்பிய ஞானமே ஞானம்
நித்திய யோக சித்தியே நியமம்
நிலமெலாங் கோயிலாம் எமக்கே!

உழைக்கும் வேர்வையினால் உலகுபொன் விளைய
உழுதுண்டு நாற்றுசெய் துடுக்கும்
ஒழுக்கமே சரியை உயிர்க்குயி ரான
ஒன்றினை வணங்கலே கிரியை
அழுக்கறு மனதால் அன்புடன் அதனை
அகங்கலந் திருத்தலே யோகம்!
பழுக்குநல் லான்ம நேயமே ஞானம்
பாரெலாம் பயிலுக நன்றே!

பதியருட் பாட்டின் அருவிமின் ஸாரம்
பாரத சக்தியாய்ப் பெருகி
துதியருள் தியான மந்திர ஒளியைச்
சூழ்ந்தருட் குலத்தினை வளர்த்தே
கதியருள் யோக சித்தியால் ஆண்பெண்
காணசிவ சக்தியாய்ப் பொலியும்
சுதியருள் சுத்த சமரஸ வுலகம்
துலங்கிடத் துணையருள் பரனே!

மாசிலாப் பிரம சரியத்தில் ஊன்றி
மணிதிகழ் பொன்னெனப் பெண்ணுள்
தேசுலாம் செல்வத் திருவருள் யோகம்
செழித்தநன் மனையறம் கிளைத்தே
காசினி யெங்கும் கருணைத்தேன் பொழியும்
கற்பக மலர்களைச் சொரிந்த
பாசமி லாத பதியறி வாகப்
பழுத்திடும் தூயவாழ் வருளாய்!

சத்திய சாந்த தீரர்கள் வாழ்க!
சமரஸப் புலவர்கள் வாழ்க!
ஒத்துநல் லுரையும் உள்ளமும் உடைய
உத்தமர் ஊர்தொறும் வாழ்க!
இத்திரு வுலகில் ஓம்சுத்த சக்தி
எனுந்திரு மந்திர முடனே
சுத்தசன் மார்க்கந் துலங்குக நீடு
சுயமருட் சோதியே போற்றி!

சுத்தானந்த பாரதி



உ

சுத்தானந்த சுவாமிகளின்

## செந்தமிழ் நூல்கள்.

| | | ரூபா-சதம் |
|---|---|---|
| பாரதசக்தி மகாகாவியம் | ... | 15-50 |
| ஆத்மசோதனை | — | 6-25 |
| இதுதான் உலகம் | ... | 8-25 |
| யோகசித்தி உரையுடன் | — | 6-50 |
| வீரவிளக்கு | .... | 4-25 |
| தமிழ் உணர்ச்சி | — | 3-25 |
| நாகரீகப் பண்ணை முதலிய கதைகள் | | 2-20 |
| வீரத்தமிழருக்கு ஆவேசக்கடிதம் | — | 1-50 |
| புத்தர் கருணை | ... | 1-10 |
| அரவிந்தப்பிரகாசம் | — | 2-70 |
| அருட்செல்வம் | ... | 2-20 |
| கீர்த்தனாஞ்சலி | ... | 3-75 |
| நவரச நடனாஞ்சலி | — | 2-20 |
| பகவத்கீதை தெளிந்த உரை | .... | 1-40 |
| தியானமாலை | ... | 1-65 |
| புதுயுகப்பாட்டு | ... | 1-56 |
| தமிழ்க்கனல் | ... | 1-10 |
| பைந்தமிழ்ச்சோலை | ... | -70 |
| அன்பு வழி | — | -70 |
| வில்லியம் பிளேக் | — | -70 |
| வானரசு | — | -60 |
| இவளும் அவளும் | — | -70 |
| அன்னை | ... | -55 |
| அர்ச்சனை மாலை | — | 50 |
| குழந்தை இன்பம் | .... | 45 |
| சாஜஜவாணி | — | — |
| யோகசித்தி மூலம் | — | -30 |
| இல்லற ஒழுக்கம் | — | -30 |

கிடைக்குமிடம்.-

மு.உ.மு. முருகேசபிள்ளை அண்ட் சன்ஸ்

"சரவண அச்சகம்"

அம்பகமுவவீதி - நாவலப்பிட்டி

# சமரச சன்மார்க்க வாசிகசாலை.

## ஞானமுரசு:

ஸ்ரீராமக் கிருஷ்ணரின் உபதேசசாரம் இதில் அடங்கிஉள்ளது.
ஸ்ரீராமக்கிருஷ்ணரின் வாழ்க்கைச் சுருக்கம்

இறைவன், இறைவனைக்காண்பது எப்படி? ஞானம், பக்தி, கருமம், பிரார்த்தனை, இறைவனைப்பற்றிய உபதேசங்கள்.

விலை அணா 6: ஸ்ரீராமகிருஷ்ணமடம் சென்னை 4.

## பாபாஜி கீதை:

பாபாஜீ ஓர் தமிழர்: அத்துடன் ஓர் யோகியும் ஆவார். மறைந்துபோன யோகமுறையை தமது யோகஅனுபவத்தினால் பாமர மக்களும் உணரும் முறையில் அநேகநூல்கள் வெளியிட்டுள்ளார் ஆங்கிலத்திலும் தமிழிலும் உண்டு அவருடைய சரித்திரச்சுருக்கமும் உபதேச சாரமும் அடங்கியதே பாபாஜி கீதையென்பது.

விலை அணா 6,

**S; A. A: RAMAIAH**
No 1-1, Arulananda Mudaly St,
Santhome Mylapore MADRAS

## கடவுள் ஒருவர் உண்டா:

இன்றைய வாலிபர் அநேகர் உள்ளத்தில் மேற்படி கேள்வி எழுவதைக் காண்கிறோம். அருட்செல்வி ஞானசௌந்தரி அம்மையார் கமலா, விமலா என்னும் இரு சகோதரிகள் சம்பாஷிப்பதாக ஐயங்களை எல்லாம் எழுப்பித்தகுந்த விடை கூறுகின்றார்.

விலை அணா 8

சிவானந்த சாதன நிலையம்
திருஈங்கோய்மலை, முசிரிதாலுக்கா
திருச்சிராப்பள்ளி ஜில்லா S-I.

Registered at the G-P-O as a News Paper No H-C 59/300

ஓம்
சுத்தசக்தி

## கோணநாயகர் கோவில் தம்பலகாமம்.

ஷ்டி கோவில் ராஜகோபுரம் இந்தியாவிலிருந்து வரழைக்கப்பெற்ற ஸ்தபதிகளால் கட்டப்பெற்று நிறைவேறியதை முன்னிட்டு,

## 19-1-53--26-1 53வரை

கும்பாபிஷேகம் நடத்தத் தீர்மானித்துள்ளோம். அத் தருணம் அன்பர்கள் யாவரும்தரிசனம்செய்து கோண நாயகர் திருவருளைப் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

**கோயில் நிருவாக சபையார்.**


ஆயுள் சந்தா அதரவாளர்கள்.

1 **ஸ்ரீ T. இராமஜெயம்**
மடக்கும்புற வட்டகொடை

2 **ஸ்ரீ V. E. கருப்பையா, Supt,**
டெவன் தோட்டம் தலவாக்கொல்லை

3 **S. இராசரத்தினம் ஆசிரியர்**
திருஞானசம்பந்த வித்தியாசாலை
வட்டுக்கோட்டை

## ஸ்ரீஇராமக்கிருஷ்ண விஜயம்

(1921-ம்ஆண்டில் இருந்து வெளிவருகிறது)

வருடச்சந்தா ரூபா 4 தனிப்பிரதி சதம் 50
ஒவ்வொரு தொகுதியும் தை மாதத்திலிருந்து தொடங்குகிறது.

ஸ்ரீஇராமக்கிருஸ்ண மடம் மயிலாப்பூர் சென்னை 4


சரவண-நாவலப்பிட்டி